**சுருக்கம்**

கதவிலக்க எண்கள் — பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிலுள்ள கட்டிடங்களுக்கு புதிய கதவிலக்க எண்கள் வழங்குவது குறித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசு ஆணை (நிலை.) எண்.232** **நாள் : 29.10.99**

**ஆணை :**

இந்திய அரசினால் 2001-ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஆரம்பப்பணிகள் வருகின்ற 2000-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தொடங்கப்படவிருக்கிறது. எனவே, இந்திய மக்கட் தொகை கணக்கெடுப்பு துறை 2000ஆம் ஜனவரி முதல் மாநில அரசு எவ்வித நிர்வாக மாறுதல்களும் மேற்கொள்ளக் கூடாது என தடையாணை வெளியிட உள்ளது. இந்த தடையாணை 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நடைமுறையில் இருக்கும். இந்நிலையில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிர்வாக சம்பந்தப்பட்ட மாறுதல்களை இந்த ஆண்டு டிசம்பருக்குள் செய்து முடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மக்கட்தொகை கணக்கெடுப்புத் துறையினர் வருகின்ற 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆரம்ப பணியாக ஒவ்வொரு கிராமம் மற்றும் சிறிய பெரிய நகரங்களின் வரைபடங்கள் தயாரிக்கும் பணியினை தொடங்கி, 2000 ஏப்ரல், மே மாதம் அளவில் அவைகளை வெளியிட்டு, பின்னர் மக்கட் தொகை கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்வதற்கான பணியாளர்களை நியமித்து, பயிற்சி அளிக்கும் பணி மேற்கொள்ளவிருக்கிறார்கள்.


2. நகராட்சி மற்றும் மாநகராட்சி சட்டங்களின்படி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் கதவிலக்க எண்கள் வழங்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் புதிய கதவிலக்க எண்கள் வழங்கப்பட்டு

...2..

பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால் தற்போதுள்ள அநேக புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு கதவிலக்க எண்கள் உபஎண்களில் (Sub-numbers) அதாவது A, B, C என்று வழங்கப்பட்டுள்ளன. மேலும் சமீபத்தில கட்டப்பட்டிருக்கும் புதிய கட்டிடங்களுக்கு எண்கள் வழங்கப்படாமலும் இருக்கலாம். எனவே மக்கட் தொகை கணக்கெடுப்புப் பணி ஆரம்பிப்பதற்கு முன்னரே அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய கதவிலக்க எண்கள் வழங்கலாமென அரசு முடிவெடுத்து அனைத்து பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் கீழ்க்கண்டவாறு கதவிலக்க எண்கள் வழங்க அரசு ஆணை வெளியிடுகிறது:-

(i). ஒரு தெரு அல்லது சாலையிலுள்ள இரண்டு பக்கக் கட்டிடங்களுக்கும், ஒரு பக்கத்தில் உள்ள கட்டிடங்களுக்கு 1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19 என்ற ஒற்றைப்படை எண்களும், மறு பக்கத்திலுள்ள கட்டிடங்களுக்கு 2, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20 என்ற இரட்டைப் படை எண்கள் வழங்க வேண்டும்.

(ii) இவ்வாறு புதிய கதவிலக்க எண்கள் வழங்கப்படும் போது பொது மக்களுக்கு பழைய மற்றும் புதிய எண்கள் குறித்து குழப்பங்கள் ஏற்படுவதை தவிர்க்க, ஒவ்வொரு கதவிலும் புதிய எண் மற்றும் பழைய எண் இரண்டையும் தமிழில் கீழ்க்கண்டவாறு குறிக்க வேண்டும்.




நாளடைவில் புதிய எண்கள் வழக்கத்திற்கு வந்தபின் பழைய எண்களை அழித்து விடலாம்.

(iii) ஒரு தெரு அல்லது சாலையின் இடது பக்கத்தில் இருந்து கதவிலக்க எண் ஆரம்பிக்க வேண்டும். தற்போது அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய எண்கள் வழங்கப்படுவதால் A,B,C,D என்ற உபஎண்கள் வழங்கக்கூடாது. புதிய கதவிலக்க எண்கள் வழங்கி மக்கட்தொகை கணக்கெடுப்பு பணி முடிவடைந்த பின்னர், எண்கள் வழங்கப்படாத புதிய கட்டிடங்களுக்கு கதவிலக்க எண்கள் வழங்கும் போது பக்கத்து கட்டிடத்தின் எண்ணோடு சேர்த்து A,B,C,D என்ற உபஎண்கள் வழங்கலாம்.

(iv) ஒரு தெருவில் அல்லது சாலையில் உள்ள கட்டிடங்களுக்கு இடையில் காலி மனை அல்லது மனைகள் இருந்தால் அந்த காலிமனை அல்லது மனைகளுக்கு கதவிலகக எண் வழஙகக்கூடாது.

(v) கதவிலக்க எண்கள் வழங்கும்போது பல மாடிகள் கொண்ட ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஒரு எண் தான் வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கிய பின்னர் அக்கட்டிடத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள எண்ணோடு உப எண்கள் சேர்த்து அதாவது 18/1, 18/2, 18/3, 18/4 என்று கட்டிடத்திற்கு வெளியில் தெரியுமாறு அக்கட்டிடச் சொந்தக்காரர்கள் அவர்களாகவே கதவிலக்க எண்கள் கொடுத்துக் கொள்ள வேண்டும். கட்டிடச் சொந்தக்காரர்கள் A, B, C, D என்ற உப எண்களைத் தங்களது பல மாடிக் கட்டிடங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

3. மேற்கூறியவாறு அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய கதவிலக்க எண்கள் வழங்கும் பணியை இந்த அரசாணை கிடைக்கப்பெற்றவுடன் ஆரம்பித்து 31.12.1999க்குள் கட்டாயமாக முடித்துவிட வேண்டும். இந்தப் பணியை ஆரம்பித்து முதலில் வெள்ளை சுண்ணாம்புக்கட்டியினால் (Chalkpiece) ஒவ்வொரு கதவிலும் வரிசையாக எண்கள் கொடுப்பது. பிறகு அக்கதவுகளில் கருப்பு வெள்ளை வர்ணங்களில் எண்கள் வழங்குவது போன்ற நடவடிக்கைகள் எடுப்பது குறித்து துறைத் தலைவர்கள் விரிவான அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. 31.12.1999க்குள் அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய கதவிலக்க எண்கள் வழங்கி அவ்விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு 20.1.2000க்குள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு ஆணையர்கள் அனுப்பி வைக்க வேண்டும்:-

**The Director of Census Operations (Tamil Nadu)**
**E Wing, Third Floor, ABC blocks,**
**Rajaji Bhavan, Besant Nagar,**
**Chennai 600 090**

மேலும், சட்டமன்ற வாக்காளர் பட்டியலில் தற்போது கதவிலக்க எண்களுக்கு இணையான புதிய எண்கள் குறித்த விவரங்களும் தயாரித்து சட்டமன்ற வாக்காளர் பதிவு அலுவலகத்திற்கும், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

5. மேலே தெரிவித்துள்ள கதவிலக்க எண்கள் வழங்குவது குறித்த பணிகள் முடிவடைந்ததற்கான ஒரு அறிக்கை 31.1.2000க்குள்ளும் மற்ற விவரங்கள் அனுப்பி வைத்ததற்கான அறிக்கையை 31.3.2000க்குள்ளும் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனத் துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

எஸ். மாலதி,
அரசு செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (மேயர் மூலமாக)
அனைத்து மண்டல் நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து உதவி பேரூராட்சி இயக்குநர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள் (தலைவர் மூலமாக)
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள். (தலைவர் மூலமாக)
பொதுத் (தேர்தல் I & VII ) துறை, சென்னை 9.
அனைத்து துறைத் தலைவர்கள்,
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature]
பிரிவு அலுவலர்.
29/x/99